# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1639/32 - 2010 පෙබරවාරි 06 වැනි සෙනසුරාදා - 2010.02.06

*1639/32 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 06 ஆந் திகதி சனிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ் வெலிவிட்டிய திவிதுர பிரதேச சபையின் துணைத் தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

துணைத் தவிசாளர், தவிசாளர் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டதன் காரணமாக வெலிவிட்டிய திவிதுர பிரதேச சபையின் துணைத் தவிசாளர் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;

வெலிவிட்டிய திவிதுர பிரதேச சபையின் தவிசாளர் லொகுகே குணசிறி எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியைச் சேர்ந்தவராக இருக்கின்றாரோ அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் அத்தகைய கட்சியைச் சேர்ந்தவரும் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் துணைத் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக வெளிப்படுத்தப்பட வேண்டியவருமான வெலிவிட்டிய திவிதுர பிரதேச சபையின் உறுப்பினரைத் தீர்மானிக்குமாறு மேற்படி கட்டளைச் சட்டத்தின் 65அ (1) என்னும் பிரிவின் கீழ் என்னால் தேவைப்படுத்தப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. ஸமந்த குமார மலவிஆரச்சி என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது வெலிவிட்டிய திவிதுர பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் அந்தோனி பிமல் இந்திரஜித் த சில்வா ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான ) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. ஸமந்த குமார மலவிஆரச்சி என்பவர், வெலிவிட்டிய திவிதுர பிரதேச சபையின் துணைத் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

ஏ. பி. ஐ. த சில்வா,
தெரிவத்தாட்சி அலுவலர்,
வெலிவிட்டிய திவிதுர பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
காலி,
2010, சனவரி 21.

2 - 495

## *(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் இரத்தினபுரி பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்*

*இறந்ததன் காரணமாக, இரத்தினபுரி பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும்;*

*ரீ. ஜனக கலுஆரச்சி எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்படவேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும் இரத்தினபுரி பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;*

*மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. உக்குவலாகே சோமவர்தன என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;*

*இப்போது இரத்தினபுரி பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் மாத்தர ஆச்சிகே பத்மசிறி சந்ரவங்ச பெரேரா ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. உக்குவலாகே சோமவர்தன என்பவர், இரத்தினபுரி பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*எம். ஏ. பீ. சீ. பெரேரா,*
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*இரத்தினபுரி பிரதேச சபை.*

*தேர்தல்கள் அலுவலகம்,*
*இரத்தினபுரி,*
*2010, சனவரி 28.*

*2 - 496*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.